**செய்தி வெளியீடு எண்:169** **நாள்:27.12.2019**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**<u>ஓட்டுநர் (Driver) பணியிடம் நிரப்புதல்</u>**

இம்மருத்துவமனையில் காலியாகவுள்ள ஓட்டுநர் (Driver) பணியிடத்தினை நேர்காணல் மூலம் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| **வ.எண்** | **இனம்** | **முன்னுரிமை பெற்றவர் / முன்னுரிமையற்றவர்** | **காலியிடம்** |
|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டவர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை பெற்றவர் - 1 | 1 |

(முன்னுரிமை என்பது முன்னாள் படை வீரர்கள், அவர்களின் முதல் வாரிசுகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் என்பதாகும்).

**<u>சம்பள விவரம்</u>**

ரூ.19500-62000 Level-8

**தகுதிகள்**

1. நியமன அதிகாரி - இயக்குநர் மற்றும் பேராசிரியர் (FAC), ஐஓஜி மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை-8
2. நியமன முறை - நேரடி நியமனம்
3. கல்வித் தகுதி -
   1. குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
   2. மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த கனரக வாகனம் உரிமம் (Heavy Vehicle License) பெற்று இருக்க வேண்டும்.
   3. குறைந்த பட்சம் இரண்டு வருடம் கனரக வாகனம் ஓட்டிய அனுபவம் பெற்று இருக்க வேண்டும்.
4. வயது - 18 – 32

மேற்தெரிவித்த பணியிடத்திற்கான விண்ணப்பம் **06.01.2020 முதல் 08.01.2020 வரை** அரசு தாய் சேய் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8ல் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சான்றொப்பமிட்ட தங்களது கல்விச் சான்றிதழ் நகல், சாதி சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், இரண்டு புகைப்படங்கள் (பாஸ்போர்ட் சைஸ் போட்டோ), முன்னுரிமை கோரும் சான்றின் நகல், கனரக ஓட்டுநர் உரிமம் மற்றும் கனரக வாகனம் ஓட்டிய அனுபவ சான்றிதழ் ஆகியவற்றினை இணைத்து விண்ணப்பங்களை வருகின்ற **09.01.2020-க்குள்** மாலை **5.45 மணிக்குள்** வந்து சேரும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**இயக்குநர் மற்றும் பேராசிரியர் அலுவலகம்,**
**அரசு தாய் சேய் நல மருத்துவமனை,**
**எழும்பூர், சென்னை-8**

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-01**